திரு. ஆ. வெள்ளைச்சாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாமல்லபுரத்தில் சிற்பக் கலைக் கூடத்தில் பயிற்சி பெறும் மாணவர்களைக் கொண்டு சிலைகளைச் செய்து வெளி நாடுகளுக்கு அனுப்பும் யோசனை அரசிற்கு இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது நாம் சிற்பக் கலையை சொல்லித் தருகிறோம். அவர்களைக் கொண்டு சிலைகளை தயாரிப்பது என்பது, அது இந்தத் துறையின்கீழ் வராது. அது வேறு துறையைச் சார்ந்ததாகும்.

திரு. ப. பொன்னுரங்கம் : தலைவர் அவர்களே, மாமல்ல புரத்தில் சிற்பக் கலையைப் பயில பயிற்சிக் காலம் எவ்வளவு ? பயிற்சிக் காலத்தில் 'ஸ்டைபண்ட்' எதுவும் மாணவர்களுக்கு வழங்கப்படுகிறதா ? அப்படியானால் ஸ்டைபண்ட் தொகை எவ்வளவு என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அது பற்றிய விவரம் இல்லை. ஸ்டைபண்ட் தருவதாகத்தான் என்னிடத்தில் சொல்லியிருக் கிறார்கள்.

மேல்நிலைப் பள்ளிகளில் நாட்டு நலப்பணித் திட்டத்தினை செயல்படுத்துதல்.

*வினா எண் 800.—திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா :—

(அ) மேல்நிலைப் பள்ளிகளில் நாட்டு நலப்பணித் திட்டம் ஏதேனும் செயல்படுத்த தமிழக அரசிடம் திட்டம் ஏதேனும் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில்; இது பற்றிய விவரம் என்ன?

(இ) மத்திய அரசு உதவி உண்டா ?

(ஈ) எவ்வளவு உதவித் தொகை வழங்கப்பட உள்ளது ?

1981 ஏப்ரல் 20]

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : (அ) மற்றும் (ஆ) மேல்நிலைப் பள்ளிகளில் 1980-81ம் கல்வி ஆண்டிலிருந்து நாட்டு நலப்பணித் திட்டம் செயல்படுத்தப் பட்டு வருகிறது. தற்போது 200 மேல்நிலைப் பள்ளிகளில் (163 ஆண்கள் பள்ளி + 37 பெண்கள் பள்ளி) 10,000 பேர் (8,150 மாணவர்கள் — 1,850 மாணவியர்கள்) இத்திட்டத்தில் பங்கு கொள்ள வகை செய்யப்பட்டுள்ளது.

(இ) உண்டு.

(ஈ) இத் திட்டத்திற்கான செலவினை மத்திய அரசும் மாநில அரசும் முறையே 7 : 5 என்ற விகிதத்தில் பங்கேற்றுக் கொண்டு இருக்கின்றன. 1980-81 ம் ஆண்டிற்கு நிதி ஒதுக்கீடு ரூ. 10 இலட்சம். இதில் ரூ. 5.83 லட்சம் மத்திய அரசு ஏற்றுக் கொள்ளும்.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் : பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே 200 மேல்நிலைப் பள்ளிகளில் இந்த திட்டம் அமுல்படுவதாகக் கூறினார்கள். மேலும் நீடிப்பதற்கு, அபிவிருத்தி செய்வதற்கு அதிகப்படி பள்ளிகளிலே அமுல் நடத்துவதற்கான திட்டம் ஏதுவும் அரசிடம் உள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்ற ஆண்டுதான் இந்தத் திட்டத்தை அமுலுக்குக் கொண்டு வந்திருக்கிறார்கள். இந்தியாவிலேயே அநேகமாக மேல்நிலைப் பள்ளிகளில் இந்த அளவிற்கு நாட்டு நலப் பணித் திட்டத்தை கொண்டு வந்தது தமிழ் நாடு தான். இதை மேற்கொண்டு இன்னும் சில பள்ளிகளிலே விரிவாக்க வேண்டும், கொண்டு வர வேண்டும் என்ற எண்ணம் அரசுக்கு இருக்கிறது. அதற்கான முயற்சிகளை நாம் மேற்கொண்டு வருகிறோம்.

[முற்பகல் 9-30]

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நாட்டு நலப் பணித் திட்டத்தின் கீழே என்ன என்ன முறையிலே கற்பிக்கப்படுகின்றது என்பதைப் பற்றி அமைச்சர் அவர்கள் விளக்குவார்களா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவர் அவர்களே, படிக்கின்ற மாணவர்கள் தாங்கள் பிறந்து வளருகின்ற சமுதாயத்திலிருந்து தனிப்பட்டு நின்றுவிடக்கூடாது என்பதற்காகத்தான் படிக்கின்ற காலத்திலேயே சமுதாயத்தினுடைய தொடர்பு

இருக்க வேண்டும், சமுதாயத்தினுடைய நிலைமைகளைப் புரிந்து கொள்ளவேண்டுமென்பதற்காக இந்த நாட்டு நலப்பணித் திட்டத்தை நாம் ஆர்வத்தோடு செயல்படுத்தி வருகிறோம்.

காஞ்சிபுரத்தில் பேறிஞர் அண்ணாவின் பெயரால் நூலகம் அமைக்கும் திட்டம்.

*வினா எண் 801—திரு. ப. வெங்கடசுப்பிரமணியம் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா.—

(அ) காஞ்சிமாநகரில் பேரறிஞர் அண்ணாவின் பெயரால் பெரிய நூலகம் அமைக்க வேண்டும் என்று பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனரா ?

(ஆ) அதன் பேரில் அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :— (அ) இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

திரு. ப. வெங்கடசுப்பிரமணியம் : தலைவர் அவர்களே, பேரறிஞர் அண்ணா அவர்கள் பிறந்த பிறகுதான் தமிழகத்திலே மறுமலர்ச்சி ஏற்பட்டது. அப்படிப்பட்ட பேரறிஞர் அண்ணா அவர்களின் பெயரால் ஒரு நூலகத்தைக் காஞ்சிபுரத்திலே அமைக்கவேண்டுமென்று பலகாலமாக கூறிவருகிறார்கள். ஆகவே அரசு அதை மறுபரிசீலனை செய்து பேரறிஞர் அண்ணா அவர்கள் பெயராலே அங்கே ஒரு நூலகம் அமைக்க முன் வருமா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவர் அவர்களே, காஞ்சிமாநகரில் பேரறிஞர் அண்ணாவின் பெயரால் பெரிய நூலகம் அமைக்க வேண்டும் என்று பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனரா என்ற கேள்விக்கு வரவில்லை என்று சொல்லியிருந்தாலும் அரசு அது குறித்து நடவடிக்கை எடுத்து வருகிறது.

திரு. ஜே. எஸ். இராசு : மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, பொதுமக்களிடமிருந்து கோரிக்கை வரா விட்டாலும் அதுபற்றி பரிசீலிக்கப்படும் என்று அமைச்சர் சொன்னதற்காக நன்றி தெரிவிப்பதோடு தொடர்ந்து ஒரு வினா எழுப்ப விரும்புகிறேன். அண்ணாவின் புகழ்பெற்ற